**சென்னை மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**ந.க.எண்.154/ஒபக/2023 நாள். .04.2023**

**பொருள்** சென்னை மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – அனைத்து அரசு / சென்னை தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் – வட்டார வள மையங்கள் மற்றும் மாவட்ட திட்ட அலுவலகம் ஆகியவற்றில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள மிகவும் பழுதடைந்த கணினிகள் மற்றும் கணினி சார்ந்த இதர பொருட்கள் (IT Product) போன்ற மின் கழிவுகள் (E-Waste) அப்புறப்படுத்துதல் – சார்பு

**பார்வை** சென்னை மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.313/ஆ6/ஒபக/கட்டடப்பணிகள்/2019 நாள். 10.02.2020

*****

பார்வையில் காணும் மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி, சென்னை மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகம் மற்றும் அனைத்து வகையான அரசு/சென்னை தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் வட்டார வள மையங்கள், பள்ளி சார்ந்த அலுவலகங்களில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள மிகவும் பழுதடைந்த கணினிகள் மற்றும் கணினி சார்ந்த இதர பொருட்கள் (IT Product), மின்கழிவு (E-Waste), அப்புறப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கபபட்டுள்ளது.

எனவே, அரசு/சென்னை தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்/பள்ளி சார்ந்த அலுவலகங்களில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள மிகவும் பழுதடைந்த கணினி மற்றும் கணினி சார்ந்த இதர பொருட்களை மீண்டும் பயன்படுத்தவே இயலாத அல்லது பொருட்களுக்கு தகுந்த உதிரிப் பாகங்கள் கிடைக்காது என்பதை பள்ளித் தலைமையாசிரியர்கள் ஆய்வு செய்து உபயோகப்படுத்த இயலாது என்பதை உறுதி செய்த பின்

அப்பொருட்களை சம்பந்தப்பட்ட வட்டார வள மையங்களில் 05.05.2023–க்குள் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

26.4.23

முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
சென்னை மாவட்டம்

பெறுநர்

1. முதன்மைக் கல்வி அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலகம், சென்னை மாவட்டம்
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி, இடைநிலைக்கல்வி, வடக்கு தெற்கு), சென்னை மாவட்டம்
3. அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்
4. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ), சென்னை மாவட்டம்
5. அனைத்து அரசு/சென்னை தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் (மண்டலங்கள் வழியாக)